பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

# நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D M K

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 15] சென்னை: ஆனி 26உ (10—7—67) திங்கள் ★ வெளியூர்: ஆனி 27உ (11—7—67) செவ்வாய் [இதழ்: 22

## 1 இலட்சம் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம்

திருவனந்தபுரம், ஜூலை 9—

மாநில அரசு தங்களின் குறைகளைத் தீர்க்க நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமெனக் கோரி ஜூலை 12-ஆம் நாள்முதல் ஏறத்தாழ ஒரு இலட்சம் முந்திரித் தொழிலாளர்கள் காலவரையறையின்றி வேலைநிறுத்தம் செய்வர்.

கேரள மாநிலத்திலுள்ள 200 முந்திரித் தொழிற்சாலைகளில் 150 தொழிற்சாலைகள் கொல்லம் மாவட்டத்தில் உள்ளன. இவைகளில் வேலைசெய்வோரில் மிகப் பெரும்பாலோர் பெண்களே!

## நல்ல நாட்களை நோக்கி நடை போட்டு வருகிறோம்!

“அரசு போட்டிருக்கின்ற திட்டங்களில்வெற்றிபெறும் அறிகுறிகள் தோன்றிவிட்டன!

“நல்ல நிலையை நோக்கி -- நல்ல நாட்களை நோக்கி நடைபோட்டு வருகிறோம்! அதற்கிடையே தோன்றும் இன்னல்கள் - துன்பம், துயரங்களைப் பல்லைக் கடித்துக் கொண்டு தாங்கிக்கொண்டால், நல்ல எதிர்காலம் இருக்கிறது!

“இந்த அரசின் நடவடிக்கைகளைப் பற்றி சட்டமன்றத்தில் காங்கிரசார் பேசும் போதுகூட, ‘உங்களால் செய்ய முடியாது’ என்று எங்களைப் பார்த்துக் கூறுவதில்லை! ‘20 வருடமாக நாங்கள் செய்யாததை, நீங்களாவது செய்ய வேண்டும்’ என்ற முறையில் மிகுந்த நம்பிக்கையுடன் தான் பேசிவருகிறார்கள்!

“காங்கிரசு உறுப்பினர்கள் கூட, ‘இந்தப் புதிய அரசின் மூலம் மக்களுக்கு நல்லது கிடைக்க வேண்டும்’ என்ற நோக்கத்துடன்தான் பேசிவருகிறார்கள்!

“விவசாயத் துறையானாலும்சரி—தொழில் துறையானாலும் சரி — நல்ல முறையில் திட்டங்கள் திட்டப்பட்டு வருகின்றன!

“இதில் ஏற்படும் பலன் இன்னும் சில மாதங்களில் தெளிவாகத் தெரியவிருக்கிறது!”

★

## பழையமுறையை மாற்றும் புதிய திட்டம் உருவாகும்!

“முன்பெல்லாம் தீயினால் குடிசைகள் பாதிக்கப்படும்; அவர்களுக்குச் சாப்பாடு போட்டுப் பணத்தைத் தருவார்கள்; அவர்கள் பழையபடி குடிசைகளைப் போட்டுக் கொள்வார்கள்! இந்தப் பழைய முறையை மாற்றும் புதிய திட்டம் திட்ட இந்த அரசாங்கம் முனைந்திருக்கிறது!

“குடிசை எரிந்துபோன செய்தி கேட்டு எம்.ஜி.ஆர். அவர்களும், இன்னும் பலரும் நிதியுதவி செய்திருக்கிறார்கள்; அரசாங்கமும் நிதி ஒதுக்கியிருக்கிறது. இந்த நிதியை குடிசைக்கு ரூ. 50—100 என்று ஒதுக்கித் தந்து, அவர்கள் மறுபடியும் குடிசை போடவோ, மூட்டிவிடப்பட்ட தீயினால் அந்தக் குடிசை அழியவோ இந்த அரசு இனியும் வழி வகுக்காது!”

---அறிஞர் அண்ணா

(சென்னைக் கூட்டத்தில்)

# ரேஷன் அரிசியின் அளவு குறையாது

## டில்லியின் நடவடிக்கையால் தமிழகத்துக்குப் பாதகமில்லை

### சட்டமன்றத்தில் மதியழகன் விளக்கம்

சென்னை, ஜூலை 10—

“தமிழ் நாட்டில் கொடுக்கப்பட்டுவரும் அரிசியின் அளவு குறைக்கப்படமாட்டாது” என்று, உணவுத்துறையமைச்சர் திரு. கே. ஏ. மதியழகன் இன்று சட்டமன்றத்தில் விளக்கமளித்தார்.

சட்டமன்றத்தில் இன்று கேள்வி நேரம் முடிவடைந்ததும், எதிர்க் கட்சியைச் சேர்ந்த திரு. கே. விநயகம் எழுந்து கேட்டதாவது:—

“நமது உணவமைச்சரும், விவசாய அமைச்சர், சட்ட அமைச்சர் ஆகியோரும் டில்லிக்குச் சென்று வந்திருக்கிறார்கள்; அரிசி கொடுக்கும் அளவை டில்லி அரசு பாதியாகக் குறைத்திருப்பதாகப் பத்திரிகையில் செய்தி வந்திருக்கிறது. டில்லி சென்று வந்த நமது அமைச்சர்களும் அந்தச் செய்தி உண்மைதான் என்று செய்தியாளர்களிடம் தெரிவித்திருக்கிறார்கள்; எனவே, டில்லி அரசு சொல்லியிருப்பதன் விவரம் என்ன என்பதை, நமது அமைச்சர்கள் இந்த மன்றத்திற்கு விளக்குவார்களா?”

இதற்கு, உணவமைச்சர் பதிலளிக்கையில் கூறியதாவது:—

“கனம் உறுப்பினர், பத்திரிகையில் வந்த செய்தியைத் தவருகப் புரிந்துகொண்டு இப்படிக் கேட்கிறார் என்று கருதுகிறேன். அரிசிப் பற்ருக்குறையுள்ள மாநிலங்களுக்கு மத்திய அரசு கொடுக்கும் அரிசி அளவைப் பாதியாகக் குறைத்திருக்கிறார்கள் என்றுதான் செய்தியில் கூறப்பட்டுள்ளது.

“பற்ருக்குறை மாநிலங்களுக்குத்தான் இந்த வெட்டு; நமது மாநிலம் அதனால் பாதிக்கப்படமாட்டாது. நமது ரேஷன் கடைகளில் எப்போதும் கொடுக்கப்பட்டுவரும் அரிசி அளவு குறைக்கப்படமாட்டாது; இப்போது கொடுக்கப்படும் அளவே தொடர்ந்து கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.”

### எல்லாக் கிராமங்கட்கும் குடும்பக் கார்டு

“எல்லாக் கிராமங்களுக்கும் பாகுபாடில்லாமல் குடும்பக் கார்டு வழங்கப்படுமா?”

என்ற கேள்விக்கும், அக்கேள்வி தொடர்பாக எழுந்த துணைக் கேள்விகட்கும் உணவு அமைச்சர் பதிலளிக்கையில் தெரிவித்ததாவது:—

“குடும்பக் கார்டு முறை என்பது வெளிச் சந்தையில் அரிசி விலையேற்றத்தைத் தடுப்பதற்காகத்தான் ஏற்படுத்தப்பட்டது. குடும்பக் கார்டு கொடுப்பதாலேயே அரிசி கட்டாயமாகக் கொடுக்கப்படவேண்டும் என்பதில்லை. ரேஷன் முறை இருந்தால்தான் கட்டாயம் அரிசி கொடுக்க வேண்டும். குடும்பக் கார்டு முறை சட்டபூர்வமற்ற ரேஷன் ஏற்பாடேயாகும். எங்கெங்கு இந்த முறை தேவையோ அங்கெல்லாம் செயல்படுத்தப்பட்டிருக்கிறது. மேலும் பல இடங்களுக்குத் தேவையென்றால், அதற்குப் போதுமான அரிசி கையிருப்பில் இருக்கவேண்டும்.

“இப்போது 8 இலட்சம் டன் அரசு கொள்முதல் செய்யத் திட்டமிட்டு கொள்முதலும் செய்து வருகிறது. இந்த எட்டு இலட்சம் டன்னுக்குப் பதிலாக 16 இலட்சம் டன் அரிசி கொள்முதல் செய்யலாம் என்றோ, எல்லா நெல்லையும் கொள்முதல் செய்துவிட வேண்டும் என்றோ இந்த மன்றம் தீர்மானிக்குமானால், மற்ற எல்லா இடங்களிலும் குடும்பக் கார்டு முறைகளை ஏற்படுத்துவதில் ஒன்றும் தடையில்லை.

“தமிழகத்தில் இப்போதே கிட்டத்தட்ட $1\frac{1}{4}$ கோடி மக்களுக்கு ரேஷன் முறையிலும், குடும்பக் கார்டு அடிப்படையிலும் அரிசி வழங்கப்பட்டு வருகிறது.

சென்னை நகரிலும், கோவை நகரிலும் மட்டும் 32 இலட்சம் பேருக்கு ரேஷன் மூலம் அரிசி கொடுக்கப்பட்டு வருகிறது.”

### அரிசி ஆலைகளை நாட்டுடைமையாக்கும் திட்டம்

“தற்போது அரிசி மிகவும் மோசமாக அறைக்கப்பட்டுக் கொடுக்கப்படுவதால், அப்படிப்பட்ட அரிசி ஆலைகளைக் கட்டாயமாக நாட்டுடமையாக்கிட ஆலோசனை உண்டா?”

என்று கேட்கப்பட்ட கேள்விக்கு அமைச்சர் கூறியதாவது:—

“தற்போது, தஞ்சை மாவட்டத்தில் ‘மாடல்’ அரிசி ஆலைகளை அரசு நடத்திவருகிறது. மேலும் அரிசி ஆலைகளை அரசே எடுத்துக்கொள்வது பற்றி மத்திய அரசுடன் கலந்தாலோசித்து ஆவனசெய்ய வேண்டும். அரிசியின் தரம் நன்ருக இருக்குமாறு கூறப்பட்டு இப்போது தரமான அரிசி கொடுக்கப்பட்டு வருகிறது.

“மேலும், மோசமான அரிசியை வழங்கும் ஆலைக்காரர்களைக் கண்காணித்து, தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.”

### தமிழகத்திற்கு உரம்

சென்னை, ஜூலை 9—

அண்மையில் தமிழக அமைச்சர்கள் மத்திய அரசுடன் நடத்திய பேச்சுவார்த்தை மூலம் தமிழகத்திற்கு அதிக அளவு உரம் கிடைக்குமென முதலமைச்சர் அண்ணா அவர்கள் கூறியுள்ளார்.

# ஏழையர் கண்ணீரைத் துடைக்கும் வரையிலாவது என்னை வாழ விடுங்கள்!

“சென்னை நகரில் குடிசைகள் என்று ஒருஇலட்சத்திற்குமேல் இருக்கலாம்; இன்னும் சிலர் ஒரு ஓலைக்கீற்று—இரண்டு மூங்கிலை நாட்டு அதற்குள்ளே வாழ்ந்துவருகிறார்கள்! இதையெல்லாம் நாலைந்து வருடத்திற்குள் மாற்றவேண்டுமானாலும் திட்டமிட்டு வேலை செய்யவேண்டும்! அதற்கு ஒரு கோடி ரூபாய்வரை தேவைப்படலாம்; அதற்கு, வசதியுள்ளவர்கள் உதவ வேண்டும் என்று கோரியிருக்கிறேன்; அரசாங்கத்திலும் நிதி ஒதுக்கத் திட்டமிட்டிருக்கிறேன்.

“நாங்கள் ஆட்சிப் பொறுப்பேற்றுள்ள நிலையில், இந்தக் காரியத்தை வெற்றிகரமாகச் செய்து முடிக்க விரும்புகிறேன்!

“குடிசைகள் தீப்பற்றிக் கொள்ள முடியாதபடி அமைக்கப்பட்ட நல்ல நிலையைக் கண்குளிரக் காண விரும்புகிறேன்!

“அதுவரையிலாவது என்னை உயிருடன் விட்டு வைக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

“இப்போது வயது 58; நாலைந்து வருடங்களில் அந்தக் காரியம் முடிந்துவிடும்—62 வயதாகிவிடும்; அப்போது உங்களால் ஆனதைச் செய்து கொள்ளுங்கள்!

“ஏழை மக்களின் கண்ணீரைத் துடைக்கும் வரையிலாவது நான் வாழ அனுமதி கொடுங்கள் -- என்னுடன் ஒத்துழையுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.”

---முதலமைச்சர் அண்ணா

(சென்னைக் கூட்டத்தில்)

## ‘பதவி விலகவேண்டிய அவசியமில்லை’

### உ. பி. அமைச்சரவை முடிவு

லக்னோ, ஜூலை 9—

உ.பி.-யில் நடைபெற்ற இடைத் தேர்தலில் கூட்டு அமைச்சரவையைச் சேர்ந்தவர்கள் தோல்வியுற்றதால் அமைச்சரவை பதவி விலக வேண்டியதில்லையென்று, உத்தரப் பிரதேச அமைச்சரவை கூடி முடிவெடுத்தது.

அமைச்சரவைக் கூட்டத்திற்குப் பின், முதலமைச்சர் சரண் சிங் வெளியிட்டுள்ள அறிக்கையில், ‘சட்டமன்றத்திற்கும், நாடாளுமன்ற மேலவைக்கும் போட்டியிட்டுக் கூட்டு அமைச்சரவையைச் சேர்ந்தவர்கள் தோல்வியுற்றனர்; இந்த முடிவு, மாநில அரசு மீது நம்பிக்கையில்லை என்பதாகாது’ என்று கூறியுள்ளார்.

## நிவாரண நிதிக்கு நகராட்சி-ஊராட்சிகள் உதவுமாறு கோரிக்கை

சென்னை, ஜூலை 8—

சென்னை நகரில் நடந்த தீ விபத்துக்களில் பாதிக்கப்பட்டோருக்கு உதவும் முதலமைச்சர் நிவாரண நிதிக்குத் தாராளமாக உதவும்படி, நகராட்சிகளும், ஊராட்சிகளும், ஒன்றிப்புக்களும் தமிழக அரசால் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளன.

“அந்த உதவி நிதிகள் கட்டாயமென்பதேயில்லை; தாமாக முன் வந்து உதவினால் மட்டும், அவை உதவலாம்” என்று, தமிழக உள்ளாட்சித் துறை அமைச்சர் மா. முத்துச்சாமி, செய்தியாளர்களிடம் கூறினார்.

## எகிப்து பகுதிகளில் இரஷ்யப் போர்க் கப்பல்கள்

மாஸ்கோ, ஜூலை 9—

இரஷ்யப் போர்க் கப்பல்கள் போர்ட் சையது, அலெக்சாண்டரியா பகுதிகளைப் பார்வையிடும்.

ஐக்கிய அரபுக் குடியரசின் அழைப்பின் பேரிலேயே இக்கப்பல்கள் வந்துள்ளனவாம்.

இந்தக் கப்பல்கள் எவ்வளவு நாட்கள் தங்கும்—எத்தனைக் கப்பல்கள் பார்வையிடும்—அவைகள் ஏன் பார்வையிடுகின்றன— என்பன பற்றியெல்லாம் குறிப்பு ஒன்றும் இல்லை.

## பாத்திமா ஜின்னா மறைவு

கராச்சி, ஜூலை 9—

பாகிஸ்தானை உருவாக்கிய காய்தே அஜாம் முகம்மது அலி ஜின்னாவின் தங்கையான பாத்திமா ஜின்னா இயற்கையெய்தினார்.

படுத்துறங்கிக் கொண்டிருந்த போதே அவர் உயிர் பிரிந்தது; மாரடைப்பால் இறந்ததாகக் கூறப்படுகிறது.

பாகிஸ்தானை உருவாக்குவதில் ஜின்னாவுடன் துணைநின்று பணியாற்றிய பாத்திமா ஜின்னா, அயூப்கானை எதிர்த்துப் பாகிஸ்தான் குடியரசுத் தலைவர் தேர்தலில் போட்டியிட்டவர் ஆவார்.

# பிரிவினைக் கோரிக்கையைத்தான் கைவிட்டுவிட்டோம்

## அதற்கான காரணங்களை எப்படி விடமுடியும்?

### அனுபவத்தை உணர்ந்து அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டும்

அறிஞர் அண்ணா தந்த விளக்கம்

சட்டமன்றத்தில் தமிழக அரசின் வரவு-செலவுத் திட்டத்தின் மீது நடைபெற்ற பொது விவாதத்துக்குப் பதிலளிக்கும் வகையில் ஆற்றிய உரையில் ‘திராவிட நாடு’ கோரிக்கையைக் கைவிட்டுவிட்டதாலேயே அந்தக் கோரிக்கைக்கான காரணங்களையும் கைவிட்டுவிடுவதற்கில்லை என்பதைத் தெளிவுபடுத்தி முதலமைச்சர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டதாவது :—

சிலர் ரொம்ப ஆராய்ந்து உண்மையைக் கண்டுவிட்டவர்கள் போலப் பேசுகிறார்கள்.

முன்பு நாங்கள் கேட்டுவந்த திராவிட நாட்டைத்தான் இன்றைக்கு மத்திய அரசுடன் போராடிப் பெற்றுவிடச் சுற்றி வளைத்துக் கொண்டிருப்பதாகச் சொல்லுகிறார்கள்; அது தவறு.

நான் திராவிட நாடு கோரிக்கையை விட்டுவிட்டேன் ; ஆனால், திராவிட நாடு கேட்பதற்கு என்னென்ன காரணங்கள் இருந்தனவோ அவற்றில் ஒன்றைக் கூட விட்டுவிடவில்லை ; அதில் ஒளிவு மறைவு இல்லை ; அதைச் சொல்லிக் கொள்வதற்கு—வெட்கப்படுவதற்கும் ஒன்றும் இல்லை.

திராவிட நாடு என்று தனியாக இருந்தால், நாம் தொழில் வளர்ச்சி பெறமுடியும் என்று சொன்னோம்.

அன்றைக்கு இந்த மன்றத்தில் இருந்த சி. சுப்பிரமணியம், திராவிடநாட்டு கோரிக்கையை எதிர்த்தார் ஆயினும் அவர், ‘சேர்ந்து இருப்பதனால்தான் தொழில்கள் வளரும் ; ஒன்றாக இருந்து தொழில் துறையில் வளர்ச்சி காண்போம் ; பத்து வருடங்கள் கழித்துப் பார்க்கிறபோதும் தொழில் துறையில் வளர்ச்சி அடையாது இருந்தால் நிச்சயமாக நானே அவர்களோடு சேர்ந்து திராவிடநாடு தனித்திருக்க வேண்டும் என்று கேட்கிறேன்’ என்று சொன்னார்.

திராவிட நாடு வேண்டுமென்று கேட்டதற்குக் காரணமே, ‘இங்கே தொழில் வளர்ச்சி ஏற்பட வேண்டும்; வட்டாரச் சமநிலை ஏற்படுவதற்குப் புதுப் புதுத் தொழில்கள் ஆரம்பிக்கப்பட வேண்டும்’ என்பதுதான் ; அதை நாங்கள் விட்டுவிடவில்லை.

அடுத்து, ‘மொழி பாதுகாக்கப்பட வேண்டும்’ என்பதற்காகத் திராவிட நாடு கேட்டோம் ; அதை விட்டுவிடவில்லை !

‘மத்திய சர்க்காரிடம் அதிகாரங்கள் குவியலாக இருக்கக் கூடாது’ என்பதற்காகக் கேட்டோம் ; அதை விட்டுவிடவில்லை !

மாநில அரசு பல அதிகாரங்களை—பல துறைகளிலும் பெற வேண்டுமென்பதற்காகக் கேட்டோம் ; அதை நாங்கள் விட்டுவிடவில்லை !

‘பண்பாடு காப்பாற்றப்பட வேண்டும்’ என்பதற்காகக் கேட்டோம் ; அதை நாங்கள் விடவில்லை !

ஆகவே, திராவிட நாட்டை நாங்கள் கேட்டதற்கான காரணங்களில் ஒன்றைக்கூட விட்டுவிடவில்லை !

அதற்குக் காரணம் என்னவென்றால் அவை நியாயமான காரணங்கள்— மனமார்ந்து ஏற்றுக் கொண்ட காரணங்கள்.

## உரிமையைக் கைவிட இயலுமா ?

நாங்கள் திராவிட நாட்டை விட்டுவிட்டோம்; ‘திராவிட நாட்டைத்தான் விட்டுவிட்டீர்களே—ஏன் இந்தியை எதிர்க்கிறீர்கள் ?’ என்று கேட்டால், ஒத்துக் கொள்ள முடியுமா ? எனவே, இந்தி எதிர்ப்பை விட்டுவிட மாட்டோம் !

திராவிட நாட்டை விட்டுவிட்டதால், ‘எங்களுக்கு சேலம் இரும்பாலை வேண்டாம்; ஜாம்ஷெட்பூரிலேயே வையுங்கள்’ என்று சொல்லிவிடுவோமா ?—நிச்சயமாகச் சொல்ல மாட்டோம் !

‘தூத்துக்குடி வேண்டாம்; இன்னொரு கண்டலா கட்டுங்கள்’ என்று சொல்லுவோமா ?—நிச்சயமாகச் சொல்ல மாட்டோம் !

திராவிட நாடு கிடைத்தால் என்னென்ன பெறுவோமோ அவை ஒவ்வொன்றையும், ‘இந்திய யூனியனி’ல் இருந்துகொண்டே பெறலாம் — பெறவேண்டும்— பெறமுடியும் என்ற நம்பிக்கையிலேதான் இருக்கிறோமே தவிர திராவிட நாட்டுக்கான காரணங்கள் ஒன்றையும் நாங்கள் விட்டுவிடவில்லை !

‘மாமியார் வீட்டை விட்டுவிட்டான்’ என்றால், ‘மனைவியை உடன் அழைத்துச் சென்றுவிட்டான் ; அல்லது, ‘வியாழக் கிழமை வா என்று மனைவிக்குச் சொல்லிவிட்டுக் கிளம்பிவிட்டான்’ என்பதுதானே தவிர, ‘மனைவியையே விட்டுவிட்டான்’ என்பது அல்ல !

‘நாடு பிளவுபடக் கூடாது’ என்றார்கள்—ஒத்துக்கொண்டோம் !

‘தனித்திருந்தால் அந்நிய தலையீடு ஏற்படும்’ என்றார்கள்—உணருகிறோம் !

“ திராவிட நாட்டைப் பெறுகின்ற காரணத்தினால் ஏற்படக்கூடிய நன்மைகளை, உள்ளே இருந்தே பெறலாம’ என்றார்கள்—அதை நம்புகிறோம் !

“ திராவிட நாட்டைக் கைவிட்ட நீங்கள், ‘சேலம்’ என்றும், ‘தூத்துக்குடி’ என்றும் வட்டார மனப்பான்மை காட்டக் கூடாது’ என்றால், நாங்கள் அதனை ஒத்துக்கொள்ளமாட்டோம் !

‘திராவிட நாட்டைக் கைவிட்ட நீங்கள் இந்தி படித்தால்தான் என்ன ?’ என்றால், நாங்கள் ஒத்துக்கொள்ள மாட்டோம் !

‘ஆந்திரப் பண்பாடு—கன்னடப் பண்பாடு—வடவர் பண்பாடு —தமிழர் பண்பாடு — என்றெல்லாம் பிரித்துப் பிரித்துப் பேசலாமா’ என்றால் நாங்கள் ஒத்துக்கொள்ள மாட்டோம் !

திராவிட நாடு எதற்காக வேண்டுமென்றோமோ அதற்கான காரணங்கள் ஒன்றையும் விட்டுவிடவில்லை — அப்படியே வைத்திருக்கிறோம் !

திராவிட நாடு பிரிந்து போக வேண்டுமென்ற அளவில் நான் சொல்லவில்லை.

இந்த மன்றத்தின் மூலமாகப் பொதுமக்களுக்கும்---பொதுமக்களுக்கு மட்டும் அல்லாமல் மத்திய அரசுக்கும் தெளிவுபடுத்த விரும்புகிறேன்—

**திராவிடநாட்டை விட்டுவிட்டோம் என்றதாலே, ‘காரணங்களையும் விட்டுவிட்டோம்’ என்பது பொருள் அல்ல ! அந்தக் காரணங்கள் அப்படியே இருக்கின்றன !**

**மத்திய அரசுடன் போராடவில்லை ; நமது ‘அரசியல் சட்டத்தின் அடிப்படைப் பிரிவுகளிலேயே திருத்தங்கள் வேண்டும்’ என்பதற்கு வாதாடுகிறேன்.**

இந்திய அரசியல் சட்டம் எழுதப்பட்ட நேரம்—வெள்ளைக்காரன் கொடி இறக்கப்பட்டு மூவர்ணக் கொடி ஏற்றப்பட்ட மகிழ்ச்சி வெள்ளத்தில் இருந்த நேரம் !

‘பதினைந்து வருடத்திற்குப்பிறகு—இருபது வருடத்திற்குப்பிறகு என்ன நிலை ஏற்படக்கூடும்’ என்பதை அதே நேரத்தில் யோசித்துப் பார்த்திருக்கமுடியாது ! நிதி அமைச்சராக இருந்த டி. டி. கே. அவர்கள், “ அரசியல் சட்டத்திலேயே பிரிவுகளைப்பற்றியே ‘ரெவ்யூ’—‘சிற்சில ஆண்டுகள் கழித்து மறு பரிசீலனை செய்யப்பட வேண்டும்’ என்கிற விதி—அரசியல் அமைப்புச் சட்டத்திலேயே இணைக்கப்பட்டிருக்க வேண்டும்” என்று பேசினார்கள்.

ஆகவே, அரசியல் சட்டம் இந்த இருபது வருட அனுபவத்தின் காரணமாக எந்த எந்தவகையில் திருத்தப்பட வேண்டும்—எந்த எந்தவகையில் மாற்றப்பட வேண்டும் என்பதை எண்ணிப் பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.”

## வேற்றுமை நிலவுவதால் ஏற்படுகின்ற இடையூறு!

நமக்கும் — மத்திய அரசுக்கும், ‘பினான்சியல் ரிலேஷன்ஷிப்’—‘அட்மினிஸ்டிரேட்டிங் ரிலேஷன்ஷிப்’ — ‘கன்சல்டேட்டிங் ரிலேஷன்ஷிப்’ என்று மூன்று வகையான தொடர்புகள் இருக்கலாம்.

ஆனால் இந்த பட்ஜெட்டைப் பொறுத்தவரையில், ‘பினான்சியல் ரிலேஷன் ஷிப்’பைப் பற்றி மட்டும்தான் குறிப்பிடுகிறேன் ; என்னுடைய பேச்சிலேயும் இதுவரையில் அதைப் பற்றி மட்டும்தான் குறிப்பிட்டுக் கொண்டுவருகிறேன்.

‘அட்மினிஸ்டிரேட்டிங் ரிலேஷன் ஷிப்’பைப் பற்றிச் சொல்ல வேண்டுமென்றால், ஆயிரத்தெட்டு இருக்கிறது.

கிண்டியில் நம்முடைய துரைத்தனத்தார், நடத்துகின்ற என்ஜினீயரிங் கல்லூரி இருக்கிறது; ஆனால் அதற்குப் பக்கத்திலே மத்திய அரசு நடத்துகின்ற தொழில் நுட்பக் கல்லூரியும் இருக்கிறது.

இங்கே இருக்கின்ற பேராசிரியருடைய சம்பளம் 500 ரூபாயாக இருக்கலாம் ; அங்கே இருக்கின்ற பேராசிரியருடைய சம்பளம் 1,500 ரூபாயாக இருக்கலாம்.

இங்கே இருக்கின்ற பேராசிரியருக்கு வகுப்பா கண்ணுக்குத் தெரியும்?—இங்கே உட்கார்ந்து கொண்டு அதை எண்ணிக் கொண்டிருப்பார் — ‘நமக்கு வேலை அங்கே கிடைத்திருந்தால் ரூ. 1,500 கிடைக்குமே’ என்று !

இப்படி, நிர்வாகத்திற்கு மத்திய அரசு ஒதுக்கிவந்திருப்பதைப் பற்றியெல்லாம், சந்தர்ப்பம் கிடைக்கும்போது—அந்தச் சந்தர்ப்பத்தை நாம்தான் உண்டாக்கிக்கொள்ள வேண்டும்—பேசிக்கொள்ளலாம்.

## நிதித்தொடர்புக்கு எல்லை எது?

இப்பொழுது நான் நிதித் துறை பற்றியும், கடன் பற்றியும் மட்டும் குறிப்பிட விரும்புகிறேன்.

நம்முடைய நண்பர்—திரு. காசிராமன் என்று நினைக்கிறேன்—அவர்கள் பேசும்போது, மத்திய அரசைப் பற்றிச் சொன்னார்களே தவிர — ‘அவர்கள் கொடுக்கின்ற மானியம் - கிராண்ட் எவ்வளவு என்று தெரியுமா ?’ என்று கேட்டார்கள்.

இதைப்பற்றி திரு. கருத்திருமன் அவர்களும், திரு. விநாயகம் அவர்களும்கூடச் சொன்னார்கள்—‘மத்திய அரசு, வருமான வரியைப் பெற்றுக்கொண்டாலும், திருப்பி அது தரப்படுகிறது அல்லவா ?’ என்று.

மத்திய அரசுக்கும் நமக்கும் நிதித் தொடர்பு, வரியிலே மட்டும் இல்லை—வரியிலே மட்டும் இருக்குமானால், மூன்று நான்கு நிதிக் குழுக்கள் ஓரளவுக்கு அதைச் சரிப்படுத்திக்கொண்டு வருகின்றன—66 சதவீதமாக இருந்தது இப்பொழுது 75 சதவீதமாக்கப் பட்டிருக்கிறது ; ‘எக்சைஸ்’ வரிகளைப் பொறுத்தவரையில், அது 50 சதவிகிதம் வரையிலும் போகவேண்டுமென்ற கருத்து வலுப்பெற்றுக்கொண்டு வருகிறது.

நாளாவட்டத்தில், ‘வசூலிக்கப்படுகின்றவற்றில் பெரும்பகுதி மாநிலங்களுக்குப் பிரித்துத் தரப்பட வேண்டும்’ என்ற நிலை நடைமுறைக்கு வரும்.

‘அது மட்டும்தான் நிதி சம்பந்தமான தொடர்பு’ என்றால், எனக்குக் குறை இருக்காது.

மானியங்கள் அவர்கள் தருகிறார்கள் ; மானியங்கள் தருவதற்கு ஓர் இலக்கணம் இல்லை—வரையறை இல்லை ; ‘டிஸ்கிரடி’ வரி என்று சொல்லக்கூடிய அளவிலேதான், அவர்களுடைய இழுப்பிற்கும் பறிப்பிற்கும் தக்கபடி—அவர்களுடைய எண்ணத்திற்கும் ஏற்பாட்டிற்கும் தக்கபடி—போகிறவர்கள் வருகிறவர்களுக்குத் தக்கபடி அளவு குறைகிறது -- விரிகிறது; இதை நிதிக்குழு நன்றாகச் சுட்டிக் காட்டியிருக்கிறது.

## விதிமுறைகள் ஏதேனும் உண்டா ?

எல்லாவற்றையும்விட அரசியல் சட்டம் தீட்டப்பட்ட நேரத்தில் —துளியும் எதிர்பாரா நிலையில், நாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் வாழ்கிறோம். இதனுடைய கிளையாகப் பேசுகின்ற முறையில் விரிவாகப் பேசாமல், சுருக்கமாகச் சொல்ல விரும்புகிறேன்.

திட்டத்திற்கு நான் விரோதி அல்ல — திட்டமிட்ட பொருளாதாரத்தை நான் எதிர்க் கட்சியிலிருந்தபொழுதே வரவேற்றிருக்கிறேன்.

ஆகவே நான், ‘திட்டம் வேண்டாம் என்கிறேன்’ என்று யாரும் தவறாகக் கொள்ளமாட்டார்கள் என்று நினைக்கிறேன்.

திட்டத்திற்காகச் செலவழிக்கின்ற பணம் — அந்தப் பணத்தைப் பெறுகின்ற வகை — அதற்காகத் தீட்டப்படுகின்ற திட்டம் —செயல்படுத்துகின்ற முறை— என்ற எல்லாவற்றிலும் மத்திய அரசுக்கு ஏகபோகம் அதிகப்படும் என்று அரசியல் சட்டம் எழுதப்பட்ட நேரத்தில் எண்ணிப்பார்க்கப்பட்டதே இல்லை ! அதற்கான விதிமுறைகள் அதிலே இல்லை !

## அவர்கள் வைத்தது சட்டமென்றால்...

கூர்ந்து கவனித்தால், வரி மூலமாகக் கிடைப்பதைவிட ‘கிராண்ட்’ ஆகவும், திட்டத்திற்காகவும் அதிகமாகக் கொடுக்கப்படுகிறது என்பது நாளாக நாளாகத் தெரியும்.

நிதிக் குழு மூலமாகப் பெறலாம் என்றால், வரி பங்கீடுவரையில்தான் பெறமுடியும் ; ‘கிராண்ட்’களைக்கூடக் குறித்த அளவிலேதான் பெறமுடியும்.

திட்டத்தைப் பொறுத்தவரையில், அவர்கள் வைத்ததுதான் சட்டம். இதை நான் சொல்வதில் ஒன்றும் தவறு இல்லை என்று கருதுகிறேன்.

## இது என்ன நியாயம்?

இந்தத் திட்டத்திற்கு ரூ. 43 கோடி மத்திய அரசிடமிருந்து கிடைக்குமென்ற நம்பிக்கையோடுதான் திட்டம் தீட்டினோம். திட்டத்தை நாங்கள் தீட்டி முடித்த பிறகு, மத்திய அரசின் திட்டத் துறையிலிருந்து அதிகாரி வந்து, ‘உங்கள் மாநிலத்திற்கு ரூ. 43 கோடி கிடைக்கும் என்று எதிர்பார்ப்பது தவறு ; உங்களுக்கு ரூ. 38 கோடிதான்வரும் ; எனவே, அதற்கேற்றபடி திட்டத்தை வெட்டிக்கொள்ளுங்கள்’ என்று சொன்னார் ; இது நியாயமா ?

நாங்கள் அவர் சொல்வதைக் கேட்டு சற்று தயக்கப்பட்ட பொழுது, அவரே சொன்னார்—‘இதிலே ரூ. 10 இலட்சத்தை எடுத்துவிடுங்கள் ; இதிலே ரூ. 6 இலட்சத்தை எடுத்துவிடுங்கள்’ என்று! காரணம் என்ன ? திட்டத்திற்கான பணத்திற்கு நாம் இவர்களைத்தான் எதிர்பார்க்கவேண்டியிருக்கிறது ! விதிமுறைகளை அவர்கள் மீறிவிடுகிறார்கள் !

## தொடர்புகளைத் திருத்தி அமைப்பது அவசியம்

நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தைப் பற்றிப் பேசிய நேரத்தில் நம்முடைய மாநிலத்திற்கு 7.14 சதவீதம் ஒதுக்கப்பட வேண்டுமென்று ஒப்புக்கொள்ளப்பட்டது ; தேசிய வளர்ச்சிக் குழு ஒப்புக்கொண்டது—திட்டக் குழு ஒப்புக்கொண்டது ; நம்முடைய அரசை நடத்தியவர்கள் ஒப்புக்கொண்டு வந்தார்கள்.

ஆனால் போன வருடம் அப்படி ஒதுக்கப்பட்ட தொகையில்—ரூ. 43 கோடி அல்லது 44கோடி என்று நினைக்கிறேன்—5 கோடியைக் குறைத்துக்கொண்டார்கள்.

இப்படிப்பட்ட தொடர்புகள் திருத்தியமைக்கப்பட வேண்டாமா என்பதை எண்ணிப்பார்த்திட வேண்டும்.

## வீரத்திற்காகச் சொல்லும் பேச்சு!

வீரத்திற்காகச் சொல்லலாம்—‘தன் கையே தனக்கு உதவி’ என்று ! இது மிகச் சாதாரணமானது என்பதை—இதைச் சிறு

(4-ம் பக்கம் பார்க்க)

# அரிசன மக்கள் நலனுக்கு அரசு ஆவன செய்யும்

## இயற்றப்பட்ட சட்டங்கள் தீவிரமாக அமுலாகும்

### அமைச்சர் சத்தியவாணிமுத்து உறுதி

சென்னை, சூலை 7—

"தீண்டாமை ஒழிப்பைத் தீவிரமாகக் கடைபிடிக்கத் தமிழக அரசு உறுதிகொண்டிருக்கிறது.

"'சலுகைகள் தரப்படும்' என அறிவிப்பது, நிலவிக்கொண்டிருக்கும் சாதி ஏற்பாட்டை நீக்குவதற்குத்தான்!

"ஆதிதிராவிட மக்களுக்குத் தொழிற்சாலையில் பங்கு தரவும், அவர்களாகவே தொழில் நடத்தவும் ஊக்கமூட்டும் பொருட்டு இலட்சக்கணக்கான ரூபாய் செலவிடப்படவிருக்கிறது"

என்று சட்டமன்றத்தில், அமைச்சர் சத்தியவாணிமுத்து, அரிசன நலத்துறை மானியக் கோரிக்கைமீது நடைபெற்ற விவாதத்திற்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது:—

"புதிய அரசாங்கம் ஏற்பட்டது முதல், அரிசன மக்களின் நன்மைக்காக இயற்றப்பட்ட எல்லாச் சட்டங்களையும் சரியாகவும், தீவிரமாகவும் அமுலாக்க உறுதிகொண்டிருக்கிறது.

### சட்டத்தில் இடமில்லை—திருத்தம் அவசியம்

கோயில் நிலங்கள் தரிசாக இருந்தால், அதை எடுத்து நிலமற்ற அரிசன விவசாயிகளுக்கு விவசாயம் செய்ய கொடுக்க வேண்டுமென உறுப்பினர்கள் பலர் கூறியுள்ளனர்.

தனி நிலச் சொந்தக்காரர்களுக்கு உள்ள உரிமைகள் அனைத்தும் கோயிலுக்கு உள்ளது. இன்னும் சொல்லப்போனால் தனியாரிடம் உள்ள நிலத்தையாவது கைப்பற்ற முடியும்; ஆனால் தரிசாகக் கிடந்தாலும் கோயில் நிலங்களைப் பொறுத்தவரையில் அப்படிச் செய்யமுடியாது. அதற்குச் சட்டத்தில் இடமில்லை; இருக்கிற சட்டத்தில் திருத்தம் செய்தால்தான் அதுமாதிரி செய்யமுடியும்.

### கொடுமைக்கு இடமில்லை!

'அரிசனங்களை சாதி இந்துக்கள் கொடுமைப்படுத்தினார்கள்' என்பது போன்ற புகார்கள் ஏதும் இதுவரை அரசாங்கத்திற்கு வரவில்லை; அப்படி ஏதாவது புகார் இருந்து உறுப்பினர்கள் என் கவனத்திற்குக் கொண்டுவந்தால் அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளும்.

### சலுகைகளைப் பெற முனைவோர் துணிவரா?

அரிசனங்களுக்குப் பல சலுகைகளை அரசு கொடுப்பதால், முற்போக்கு சமுதாயத்தினரும் இப்போது, அந்தச் சலுகைகளைப் பயன்படுத்திக் கொள்ளுவதற்காக 'நாங்களும் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள்—பிற்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள்' என்று சொல்லிக்கொள்ள முன்வருவதைப் பார்க்கிறோம்.

அதே முறையில் தாழ்ந்த சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுடன் திருமணம் செய்துகொள்பவர்களுக்குத் தங்கப் பதக்கம் பரிசு என்ற முதலமைச்சர் கொண்டுவந்த திட்டத்தின்கீழ் முற்போக்கு சமுதாயத்தினரும் தாழ்த்தப்பட்ட வகுப்பினரைச் சேர்ந்த பெண்களை மணக்க முன்வருவார்கள் என்ற அடிப்படையில்தான், தங்கப் பரிசு திட்டம் கொண்டுவரப்படுகிறது.

### ஒதுக்கப்பட்ட இடங்களைப் பெற முன்வராத நிலை ஏன்?

கல்லூரிகளிலும், உத்தியோகத் துறையிலும் அரிசனங்களுக்கு 16 சதவிகித இடம் ஒதுக்கப்படுகிறது; 'இது போதவில்லை' என்று கூறப்பட்டது; ஆனால் இந்த 16 சதவிகித இடங்களில்கூட போதுமான அரிசனங்கள் வருவதில்லை என்ற நிலைதான் உள்ளது.

இந்த ஆண்டிலேனும் ஒதுக்கப்படும் அளவு இடங்களை அரிசனங்கள் பயன்படுத்திக் கொள்வார்கள் என்று நம்புகிறேன்."

# இந்திய அரசின் உணவு உற்பத்திக் குறியளவு

## நிறைவேற இயலாததற்குக் காரணம் என்ன?

புதுடில்லி, சூலை 7—

இந்திய அரசு, 1971-ம் ஆண்டு வாக்கில் உணவு உற்பத்தியை 11-கோடியே 50-இலட்சம் டன்னாக உயர்த்துவதற்குக் கொண்டுள்ள நம்பிக்கையானது, 'நடைமுறை சாத்தியமானதல்ல' என்று இந்தியாவின் உணவு நிலைமையை ஆராய்ந்த அமெரிக்க ஏ. ஐ. டி. அமைப்பின் நிபுணர்கள் முடிவுக்கு வந்துள்ளதாகத் தெரிகிறது.

மேற்படி உற்பத்தி அளவு, நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் குறியளவாகும்.

விவசாயிகளுக்கும் போதிய ஊக்கச் சலுகைகள் இல்லை என்பது, உணவு உற்பத்தி வளர்ச்சி வேகம் குறைவாக இருப்பதற்கு அந்த நிபுணர்கள் கூறும் காரணங்களில் ஒன்றாகும்.

எனவே, 'சாகுபடியாளர்கள் விளைச்சல் விகிதத்தைப் பெருக்குவதில் அக்கறை காட்டவில்லை' என்பது அவர்களுடைய வாதமாகும்.

விளைச்சல் பெருக்கத்தைப் பாதிக்கும் மற்றொரு முக்கிய அம்சம் நிலச் சீர்திருத்தங்கள் இல்லாமையாகும். சரியானதொரு நிலக் கொள்கையானது விவசாயிகள் உற்பத்தியைப் பெருக்க உதவும் என்று அவர்கள் கூறுகின்றனர்.

மாவட்ட மட்டத்திலும், மாநில மட்டத்திலும் அரசாங்க அமைப்புகளில் உள்ள அளவுக்கு மீறிய 'சிவப்பு நாடா' முறையானது, விவசாயிக்கு உதவுவதாக இல்லை; அரசாங்கம் அளிக்க முன்வரும் வசதிகளைப் பயன்படுத்திக் கொள்ள அது அவரை உற்சாகமற்றவராக்குகிறது.

# சென்னை 42-வதுவட்ட மக்கள் பொதுநல மன்றம்

மேற்படி மன்றத்தின் நிர்வாகிகள் தேர்தல், 25—6—67 காலை 11-மணியளவில் 42-வது வட்டச் செயலாளர் தோழர் டி. எஸ். சீவரத்தினம் அவர்களை ஆணையாளராகக்கொண்டு நடைபெற்றது; கோ. தி. மகேசுவரன் அவைத் தலைவராகவும், கோ. பாலகிருஷ்ணன் செயலாளராகவும், கே.முனுசாமி துணைச் செயலாளராகவும், ந. சுப்பிரமணியம் பொருளாளராகவும், ஏழு பேர் செயற்குழு உறுப்பினர்களாகவும்தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

# அரசு பஸ் ஊழியர்கட்கு ஊக்கப் பூரிப்பு ஊதியம்

### அமைச்சர் மு. கருணாநிதி விளக்கம்

சென்னை, சூலை 7—

சென்னை நகரில் அரசுப் போக்குவரத்து பஸ்களில் பணியாற்றும் டிரைவர்கட்கும், கண்டக்டர்கட்கும் வசூல் அடிப்படையில் தூண்டுகோல் பூரிப்பூதியம் வழங்கும் திட்டம் ஆய்வில் இருந்துவருவதாகவும், இதுபற்றிய விவரங்கள் இன்னும் முடிவாக்கப்படவில்லை என்றும், சட்டமன்றத்தில் பொதுப் பணித் துறையமைச்சர் திரு. மு. கருணாநிதி தெரிவித்தார்.

துணைக் கேள்விகளுக்கு அமைச்சர் பதிலளிக்கையில் தெரிவித்ததாவது:—

முதல் கட்டமாக சென்னையில் மட்டும் இத்திட்டம் செயல்படுத்தப்படும்; பிறகு படிப்படியாக வெளியூர் பஸ்களில் பணியாற்றுவோருக்கும் விரிவுபடுத்தப்படும்.

"இதைப்போல் வேறு எந்த மாநிலத்திலாவது அரசு கொடுக்கிறதா என்பதை எழுதிக் கேட்டிருந்தோம்; எந்த மாநில அரசும் கொடுக்கவில்லை. ஆனால், பம்பாய் மாநகராட்சி நடத்தும் போக்குவரத்து ஊழியர்கட்கு இப்படிக் கொடுக்கப்படுவதாக தகவல் கிடைத்துள்ளது; அதாவது, மாதம் 9,000 டிக்கெட்டுக்கு மேல் விற்றால் அதிகப்படியான ஒவ்வொரு 50 டிக்கெட்டுக்கும் 25 காசும், 20,000 டிக்கெட்டுக்கும் 35 காசும் போனசாகக் கொடுக்கிறார்கள்.

பஸ் ஊழியர்கட்கு வீடு கட்டிக்கொள்ள மனை அளிக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் அங்கு வீடு கட்டிக்கொண்டால் விளக்கு—சாலை—மற்றும் சுகாதார வசதிகளை அரசு செய்து கொடுக்க இருக்கிறது."

# கேரள நீர் மின்சாரத் திட்டம் பாதிக்கப்படும்

### டில்லி உத்தரவின் விளைவு

புதுடில்லி, சூலை 8—

வெளிநாட்டு உதவியுடன் மேற்கொள்ளப்பட்டுள்ள நீர் மின்சாரத் திட்டங்கள்—பெருஞ் செலவு பிடிக்கும் மற்ற திட்டங்கள் ஆகியவற்றை நிதானமாக அமுல்நடத்துமாறு இந்திய அரசு உத்தரவிட்டுள்ளதாம்; நிதி நெருக்கடியே இதற்குக் காரணமாம்.

"தற்போதைய திட்டங்களுக்கான செலவைக் குறைத்து அவற்றின் அமுல் காலத்தை மேலும்—அநேகமாக ஐந்தாவது திட்ட காலத்துக்கு—நீடிக்க வேண்டியிருக்கிறது" என்று சில நட்புறவு நாடுகளுக்கு இந்தியா தெரிவித்துள்ளதாகத் தகவலறிந்த வட்டாரங்கள் கூறின.

உடனடியாகப் பாதிக்கப்படவிருக்கும் திட்டங்களில் ஒன்று கேரள இடுக்கி நீர்மின்சாரத் திட்டமாகும். அது, கனடிய உதவியுடன் மேற்கொள்ளப்பட்டதாகும். அத்திட்ட அமுல் வேலையை ஐந்தாவது திட்ட காலத்திலும் நடைபெறும் வகையில் நிதானமாக நடத்தப்படலாம்.

# திருமண வயது

## ஆண்களுக்கு 21—பெண்களுக்கு 18!

புதுடில்லி, சூலை 7—

திருமண வயதை ஆண்களுக்கு 21 ஆகவும், பெண்களுக்கு 18ஆகவும் உயர்த்துவதற்கு மாநில முதலமைச்சர்கள் ஒருமனதாக ஆதரித்தனர்.

மூன்று குழந்தைகளுக்கு மேலுள்ள ஆண்களுக்கு அறுவைச் சிகிச்சை மூலம் கட்டாய கருத்தடை செய்வதையும், கருச்சிதைவுச் சட்டத்தைத் தளர்த்துவதற்கும் பெரும்பாலான முதலமைச்சர்கள் ஆதரவு தந்தனர்.

# ஆட்சியின் பெருமையை சீர்குலைக்க முயற்சி!

## சூழ்ச்சிக்காரரின் எண்ணம் ஈடேறாது

### அமைச்சர் சாதிக் பாட்சா தெளிவுரை

சென்னை, சூலை 7—

"கடந்த சில நாட்களாகச் சென்னையின் சில பகுதிகளில் தீவிபத்து ஏற்பட்டு ஏழை மக்கள் தொல்லைக்கு ஆளாகிவருகிறார்கள்!

"அந்த ஏழை மக்களைக் காப்பாற்ற தி.மு. கழக அரசு உறுதி எடுத்துக்கொண்டிருக்கிறது; ஏனெனில் இந்த அரசு ஏழை மக்களின் அரசு; தொழிலாளர்களின் அரசு; உழவர் பெருமக்களின் அரசு ஆகும்"

என்று நலத் துறை அமைச்சர் எஸ்.ஜே. சாதிக் பாட்சா பேசுகையில் தெளிவுபடுத்தினார்.

சென்னை 72-வது வட்டம் அண்ணா அறிவு வளர்ச்சி மன்றச் சார்பில் நாகப்பையர் தெருவில் ஓர் பாராட்டுக் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்திற்கு தோழர் எம். துரைவேலு தலைமைவகித்தார்.

தோழர்கள் சண்முகம், பகுதித் துணைச் செயலாளர் கே. எஸ். பாண்டியன், பி. ஆர். நாகராசன் எம்.சி., கொளத்தூர் கோதண்டம் எம்.எல்.ஏ., சி. சிட்டிபாபு எம்.பி. ஆகியோர் பேசினர்.

அமைச்சர் சாதிக் பாட்சா மேலும் பேசியதாவது:—

"தமிழகத்தில் நடந்த பொதுத் தேர்தலில் பயங்கரமான விளைவுகளைச் சந்தித்த பிறகுதான் கழகத் தோழர்கள், தமது கடுமையான உழைப்பினால் தி. மு. கழக ஆட்சியை நிறுவினார்கள்.

கழகத் தோழர்கள் மட்டுமல்ல—அறிஞர் அண்ணா அவர்களையே உடுமலைப்பேட்டைக்கு அருகில் பொதுத் தேர்தல் நேரத்தில் தாக்கச் சதித் திட்டம் தீட்டினார்கள்—காங்கிரசுக்காரர்கள்! அத்தகைய சதித் திட்டங்களைத் தகர்த்தெறிந்துவிட்டுத்தான் தி. மு. கழக ஆட்சியை நிறுவியிருக்கிறோம் என்பதை மீண்டும் அவர்களுக்கு நினைவூட்டுகிறோம்.

காங்கிரசல்லாத ஆட்சிகள் பல மாநிலங்களில் நடைபெற்றாலும், தனிப் பெரும் கட்சியாக—நிலையான அரசாங்கத்தை நடத்துகிறது தி. மு. கழகம்; இதைக் கண்டு பொருமை கொண்ட சிலர், இந்தப் பெருமையைக் குலைக்க முயலுகிறார்கள்!

பஸ் கட்டணக்குறைப்பு-ரூபாய்க்கு ஒரு படி அரிசி போன்ற சிறப்பான திட்டங்களை தி. மு. கழகம் வெற்றிகரமாக நிறைவேற்றி வருகிறது; இதைக் கண்டு பொருமைகொண்ட காங்கிரசுக்காரர்கள் கீழ்த்தரமாகப் பேசி வருகிறார்கள்.

எவ்வளவுதான் தொல்லைகள் ஏற்படுத்தினாலும் துயரங்களை மூட்டிவிட்டாலும் நிச்சயமாக தி. மு. கழக ஆட்சியை அசைக்க முடியாது!

ஏனென்றால், மிகச் சிறிய காரியமானாலும்—மிகப் பெரிய காரியமானாலும்—நிதானமாகக் காலடி எடுத்துவைத்து முன்னேறும் அண்ணா அவர்களைத் தலைவராகப் பெற்றிருக்கிறது இந்த ஆட்சி!

கழகத் தோழர்களுக்கு இந்த நேரத்தில்தான் வேலை அதிகம்—அறிஞர் அண்ணா அவர்களின் கருத்தை நாட்டின் ஒவ்வொரு மூலைக்கும் எடுத்துச் செல்லும் பிரச்சாரப் படையாக மாற வேண்டும்."

# சென்னைக்குக் காவிரி நீர்

### திட்ட அறிக்கை தயாராகிறது

சென்னை, சூலை 10—

காவிரி நீரைச் சென்னை நகருக்குக் கொண்டுவரும் சாத்தியம் பற்றிய 'திட்ட அறிக்கை'யை வகுக்கும் பொறுப்பு, தமிழக அரசின் நீர்ப் பொறியியல் பிரிவின் நிர்வாக எஞ்சினீயர்களிடம் விடப்பட்டுள்ளது.

சென்னை நகருக்கு மாநிலத்திற்குள்ளிருந்தே போதிய நீரைப் பெறுவது என்பது குறித்துத் தமிழக அரசு சிறிது காலமாகவே சிந்தித்து வருகிறது. இதற்கு முன்பிருந்த அரசு, அண்டையிலுள்ள ஆந்திரம்—கேரளம் ஆகிய மாநிலங்களின் உபரி நீரைச் சென்னைக்குப் பெறப் பேச்சு நடத்தியது; ஆனால் இதில் உருப்படியான தீர்வு எதுவும் இதுவரை காணப்படவில்லை.

தமிழகத்திற்குள் ஓடும் ஆறுகளின் நீரை மிகவும் சிக்கனமாகப் பயன்படுத்தும் ஒரு திட்டத்தை வகுப்பதில் தமிழக அரசு ஆழ்ந்த அக்கறை காட்டுவதாக அதிகாரிகள் கூறுகின்றனர்.

மத்திய அரசிடமிருந்து பண—தொழில்நுட்ப உதவியைப் பெறும் வகையில் அதனிடம் அளித்த விரிவான தகவல் அடங்கிய 'திட்ட அறிக்கை'யை வகுக்குமாறு எஞ்சினீயர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கின்றனர்.

ஐ. நா. சபையின் ஆலோசனையைப் பெறுவதற்காக அங்கும் ஓர் அறிக்கை அனுப்பிவைக்கப்படலாம்.

# திருவரங்கம் கோயில் திருப்பணி

## அரசு மேற்கொள்ளவில்லை

### சிற்பக் கலையைக் காக்கவே ஐ. நா. உதவி

"திருவரங்கத்திலுள்ள அரங்கநாதசாமி கோயிலைப் புதுப்பிக்க அரசு எண்ணியுள்ளதா?"

என்று சட்டமன்றத்தில் திரு. கே. விநாயகம் கேட்ட கேள்விக்கு, அறநிலையத்துறை அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள், 'இல்லை' என்று விடையளித்தார்.

இது தொடர்பாக எழுந்த துணைக் கேள்விகட்குப் பதிலளிக்கையில் அமைச்சர் தெரிவித்ததாவது:—

"சிற்பங்கள் தவிர கோயிலின் மற்ற திருப்பணிகளைச் செய்ய டாக்டர் ஏ. இராமசாமி முதலியார் தலைமையில் சமயச் சார்புடைய குழு ஒன்று அமைக்கப்பட்டு அது பணியாற்றி வருகிறது.

"அந்தக் கோயிலில் உள்ள சிற்பங்களைப் பழுதுபார்த்துப் புதுப்பிப்பதற்காக மட்டும் ஐ. நா. நிறுவனம் 12,000 டாலர் நிதி உதவியளிக்க முன்வந்துள்ளது.

"ஐ. நா. அதிகாரி வந்து கோயிலைப் பார்த்துப் போனது உண்மை; ஆனால் அவர், ஆலோசனை எதுவும் கூறவில்லை. 'பண்டைச் சிற்பக் கலையம்சங்கள் நிறைந்துள்ள கோயில் தானா அது? அதனைப் பழுது பார்க்க வேண்டியது அவசியந்தானா?' என்பதையெல்லாம் கண்டறிந்து போகவே அவர் வந்தார்."

# நல்ல எதிர்காலம் நாட்டுக்கு இருக்கிறது!

"நண்பர்களைக் கேட்டுக்கொள்வேன்—இந்த இக்கட்டான சமயத்தில் நீங்கள் செய்யவேண்டியவை நான்கு உள்ளன:—

1. வதந்திகளைப் பரப்புவதை விட்டுவிடுங்கள்; நமக்கும், 'போய்ப் பார்க்கவேண்டும்' என்றுதான் இருக்கும்; மைலாப்பூர் போய் வந்ததும், நண்பர் கேட்பார்—'என்ன விசேடம்' என்று; 'அந்தச் சுவருக்குப் பக்கத்தில் 'மினுக்கு, மினுக்கு' என்றது; பிறகு, 'குபீர்' என்றது' எனக் கூறத்தான் தோன்றும். அத்தகைய பேச்சைக் கேட்டுவிட்டு, 'நாமும் அதைப்பற்றிப் பிறரிடம் கூறவேண்டும்' என்ற நினைப்பு வரலாம்; அந்த எண்ணத்தை அடக்கவேண்டும்.
2. குடிசைகளைக் காப்பதாகச் சொல்லிக்கொண்டு அக்கம் பக்கம் வருவோரைத் தாக்கும் காரியத்தை உடனடியாகக் கைவிட வேண்டும்; என்மீது அன்பும் பாசமும் உள்ளவர்களிடம் கூறிக்கொள்வேன்—அப்படி நிரபராதிமீது நீங்கள் தரும் அடி—அறிந்தோ—அறியாமலோ—என்மீது விழும் அடியாகும்!
3. பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் தேடுவதற்கு நிதி தாருங்கள்!
4. புதியபுதிய குடிசைப்பகுதிகள் இனியும் ஏற்படாதவாறு தடுக்க முனையுங்கள்!

"இத்தகைய முறையில் நீங்கள் ஒத்துழைத்தால், இன்று இருப்பதைவிட நாளை—நாளை இருப்பதைவிட மறுநாள்—நல்ல எதிர்காலம் நாட்டுக்கு இருக்கிறது!

—முதலமைச்சர் அண்ணா

(சென்னைக் கூட்டத்தில்)

## வருவாய்க்கேற்ப அரிசிக்கு விலையாம்!

திருவனந்தபுரம், ஜூலை 7—உணவுப் பங்கீட்டு அட்டைக்கு, உரியவரின் வருவாய்க்கேற்ப, பங்கீட்டுக் கடைகளில் வழங்கப்படும் அரிசியின் விலையை மாற்றி அமைக்கலாமாவென ஆய்வு செய்துகொண்டிருப்பதாக, கேரள உணவு அமைச்சர் கௌரி தாமஸ் சட்டமன்றத்தில் ஒப்புக்கொண்டார்.

# ஏங்கிய மக்களுக்கு என்ன செய்கிறீர்கள்?

"உங்கள் எண்ணமெல்லாம், 'யார் இந்தத் தீயை மூட்டிவிட்டது' என்பதில் அலைந்துகொண்டிருக்கிறது! என் எண்ணம், 'இப்படியும் ஏழை மக்கள் வாழவேண்டுமா? இதை மாற்ற என்ன வழி?' என்று ஏங்கிக்கொண்டிருக்கிறது!

:'குடிசைவாழ் மக்கள், வீட்டிலுள்ள தங்கள் சாமான்களை வெளியே எடுத்துப் போட்டுக்கொண்டு, 'தங்கள் குடிசைக்கு என்ன ஆகுமோ' என்று ஏங்கியவாறே அந்தக் குடிசையையும் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்! 'எந்த நேரத்தில் என்ன ஆகுமோ' என்ற அச்சத்தில், பதைபதைத்தபடி குழந்தைகுட்டிகளுடன் வீதியில் படுத்திருக்கிறார்கள்! 'இன்று உழைத்தால்தான் இன்றைய சாப்பாட்டுக்கு வழி' என்ற நிலையிலுள்ள அந்த மக்கள் பதறிக்கொண்டிருக்கிறார்கள்!

"இத்தகைய நேரத்தில், 'குடிசைகளுக்குத் தீயிட்டவர் யார்?' என்ற பேச்சிலேயே நாம் காலத்தைக் கடத்திக் கொண்டிருப்பது சரியல்ல!

"ஒரு ஓலைக் குடிசைக்குத் தீ வைப்பது என்பது மிகப் பெரிய காரியமல்ல—சாதாரணமான காரியம்; அதைச் செய்தவர்களைப் பற்றி அறியும் காரியத்தை போலீசுத் துறைக்கு விட்டுவிடுங்கள்! அதைக் கூடவா எங்களால் கண்டுபிடிக்க முடியாது—நிச்சயம் கண்டுபிடிப்போம்! தண்டிப்போம்!

"பதறுகின்ற மக்களுக்குப் புதுவாழ்வு தருவதில் நாம் ஈடுபடவேண்டும்; அரசின் திறமை முழுவதும் அதற்காகப் பயன்படுத்தப்பட வேண்டும்!"

—முதலமைச்சர் அண்ணா

(சென்னைக் கூட்டத்தில்)

# அறிஞர் அண்ணா தந்த விளக்கம்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

பிள்ளைகளுக்குப் பாடமாக வைத்ததிலிருந்தே தெரிந்துகொள்ளலாம். இதைக் கல்லூரிகளிலா சொல்லிக் கொடுக்கிறார்கள்? எளிதாகப் புரியக்கூடியது இது!

'தன் கையே தனக்கு உதவி' என்றால், மத்திய சர்க்காருடைய கையை நான் வேறு கை என்று கருதவில்லை!

## பழி போட அல்ல—திட்டவட்டமான கருத்தே!

மத்திய அரசைப்பற்றிக் குறிப்பிடும்பொழுது நிதிநிலை அறிக்கையிலே நான் குறிப்பிட்டிருக்கிறேன் — 'பார்ட்னர்ஸ்' என்று — அதாவது, 'பங்கு கொண்டவர்கள்' என்றுதான் குறிப்பிட்டிருக்கிறேனே தவிர, 'மேல் அதிகாரம் படைத்தவர்கள்' என்பதைக்கூட நான் முழு அளவுக்கு ஒப்புக்கொள்ளத் தயாராக இல்லை.

நிதிநிலைத் தொடர்பில் நமக்கும் அவர்களுக்கும் இருக்கின்ற தொடர்பு திருத்தியமைக்கப்பட வேண்டுமென்பதில் இந்த அரசு திட்டவட்டமான கருத்துக் கொண்டிருக்கிறது.

நான் இப்படிச் சொல்லுவது, எங்களால் செய்ய முடியாமல் அவர்கள் மீது பழிபோடுவதற்காக அல்ல!

## அந்தக் கதைகள் நிரம்ப உண்டு!

"ரூபாய்க்கு ஒரு படி அரிசி என்று — வழியிருந்தால் — நீங்களே போடுங்கள்; ஏன் மத்திய அரசிடம் போய் போய் வருகிறீர்கள்?" என்று கூறினார்கள்.

பல காரியங்களை முன்னாலிருந்த அரசு செய்து மத்திய அரசிடம் போய் போய் வந்த கதைகள் நிறைய இருக்கின்றன! அது திரு. கருத்திருமன் அவர்களுக்கும் தெரியும்—திரு. விநாயகம் அவர்களுக்கும் தெரியும்.

அதைச் சொல்லுவது தேவையோ தேவையில்லையோ என்றாலும், பல காரியங்களை முன்பு இருந்த அரசு செய்துவிட்டு, மத்திய அரசை, உதவி அளிக்கும்படிக் கேட்டிருக்கிறார்கள்.

திரு. காமராஜ் அவர்களைச் சந்தித்தபொழுது அவர்கூடச் சொன்னார்—'நீங்கள் சண்டை போட்டால் நடக்காது; செய்துவிட்டுக் கேளுங்கள்' என்று!

K Vinayagam :—"The Hon. Chief Minister is letting out a secret."

அண்ணா :—"இதில், 'இரகசியம்' ஒன்றுமில்லை. எனக்கும் அவருக்கும் உள்ள நட்பு எல்லோருக்கும் தெரியும். அவருடைய முறைகள் என்ன என்பதும் தெரியும். அவருக்கு மட்டும்தான் அது முறையாக இருக்கும். 'கொடப்பா' என்று அவர் சொன்னால் — அவர் நான்கு தடவை கேட்டால் இரண்டு தடவையாவது கிடைக்கும்.

ஆனால் நான் சொன்னால், 'உட்கார்; கணக்குக் கொடு' என்றுதான் என்னிடம் சொல்லுவார்கள்!

அவர் சொன்ன முறை, அவரைப் பொறுத்த வரையில் சரி—எனக்குச் சரியாக இருக்காது!

'செய்துவிட்டுக் கேட்கலாம்' என்று அவர்கள் சொன்னார்கள்.

செய்துவிட்டுக் கேட்கும்பொழுதுகூட நான், 'உணவு உதவித் தொகை கொடுங்கள்' என்று கேட்கவில்லை—அவர்களைக் கேட்க எனக்கு உரிமை இருக்கிறது.

நிதிக் குழு அறிக்கையில், 'மாநில அரசு உணவுப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காகக் கேட்டாலும்—பஞ்சப் படி சம்பந்தமாக தொல்லைகள் ஏற்பட்டாலும், அதற்கு மத்திய அரசு உதவ வேண்டும்' என்று தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே அப்படிக் கேட்பதற்கு எனக்கு உரிமை இருக்கிறது—நியாயம் இருக்கிறது; ஆனால், நான் அப்படிக் கேட்கவில்லை.

## உதவி கேட்பதில் என்ன தவறு?

நான் அவர்களிடம் சொன்னது—எந்த முறையில் வேண்டுமானாலும் நான் கேட்பதற்குப் பெயர் வைத்துக்கொள்ளுங்கள்— சிறு நீர்ப்பாசனம் என்று வைத்துக் கொண்டாலும் சரி—உணவு உதவித் தொகை என்று வைத்துக்கொண்டாலும் சரி—'எப்படியாவது ரூ. 10 கோடி முதல் ரூ. 15 கோடி வரை எனக்குக் கொடுத்தால், எங்கள் மாநிலத்தில் சிறிய பாசனத் திட்டத்தை—எங்களுடைய அதிகாரி திரு. இராயப்பா அவர்கள் கொடுத்திருக்கின்ற திட்டத்தை நிறைவேற்றுவதன்மூலம், உணவு உற்பத்தியைப் பெருக்கி—உணவு நெருக்கடியைத் தீர்த்து—அண்டை மாநிலங்களுக்குக் கூட உணவு தரத்தக்க நிலையில் திட்டத்தை நிறைவேற்றுவோம்' என்பதுதான்.

'உணவு உதவித் தொகை கேட்கலாமா' என்று சொல்வதற்கு வழியில்லை; அப்படியே வைத்துக்கொள்ளுங்கள்—கேட்டால் என்ன தவறு?

## நியாயக் குறைவு ஏதேனும் உண்டா?

ரூ. 118 கோடி இந்தியா முழுவதற்குமாகச் சேர்த்து உணவுக்காக 'உதவி' தரப்படுகிறது.

நாம் அரிசி சாப்பிடுகிறவர்களாக இல்லாது கோதுமை சாப்பிடுகிறவர்களாக இருந்தால் ரூ. 10 கோடியாவது நமக்குக் கிடைத்திருக்கும். நாம் அதை இழந்துவிட்டல்லவா இருக்கிறோம்?

அப்படி இருக்கும்போது, 'இந்தியா முழுவதும் தருகிற அந்தச் சலுகையில் ஒரு பகுதியை எங்களுக்குக் கொடுங்கள்' என்று கேட்பதிலே எந்தவிதமான நியாயக் குறைவும் இல்லை.

மறுபடியும் நான் கவனப்படுத்துகிறேன்—நான் அதற்காக உதவித் தொகை கொடுங்கள் என்று கேட்கவில்லை; மற்றவற்றைப் பற்றிச் சொல்லும்போது இதையும் இணைத்து எடுத்துக்காட்டப் பயன்படுத்தியிருக்கிறேன்."

[தொடரும்]

# பகையுணர்ச்சி எவருக்கும் இருக்கக்கூடாது

"நெடுந்தொலைவிலே இருக்கிறவர்களுக்கு நம்மிடத்திலே ஏற்பட்டிருக்கிற நல்லுணர்ச்சி இங்கே நம் அருகில் இருக்கின்றவர்களுக்கு இல்லை; இதனால்தான், பல்வேறான அருவருக்கத்தக்க நிகழ்ச்சிகள் நடக்கின்றன. இதை நான் கூறக் காரணமே, 'யாருக்கும் பகையுணர்ச்சி எண்ணம் வரக்கூடாது' என்று கேட்டுக்கொள்வதற்காகத்தான்!

"வதந்திகள் உலவும்போது, பொறுப்போடு சிந்திக்கின்றவர்கள், அதை மற்றவர்களுக்குச் சொல்லக்கூடாது. குறிப்பாகச் சென்னை நகர தீ விபத்துக்களுக்கான காரணம் பற்றி, தனி அதிகாரி கவனித்துவரும்போது, நாம் அதுபற்றிக் கவனிக்கத் தேவையில்லை.

"சதித் திட்டமிருந்தால்—யாராவது அப்படி நடந்துகொண்டால்—அதைக் கண்டுபிடிக்கும் போலீசு நம்மிடம் உள்ளது என்ற தைரியத்தில் சொல்லுகிறேன்—பீதி பரவாது தடுத்திடுங்கள்; வீடிழந்து—சொத்திழந்து அல்லற்படும் மக்களுக்கு உதவ முன்வாருங்கள்!

"சதி—நாசவேலைகளில் ஈடுபடுவோரைக் கண்டுபிடிப்பது பற்றிப் போலீசுத் துறைக்கு மிகக் கடுமையான உத்தரவுகள் போடப்பட்டுள்ளன—கண்டுபிடிப்பதும் முடியாத காரியமல்ல!

"பீதி கிளப்பினால், சந்தேகம்வரும்; பகைமூளும்! நீங்கள் பீதி பரவாது பார்த்துக்கொள்ளலாம்; சந்தேகத்திற்கு இடமானவர்களைப் போலீசார் பார்த்துக்கொள்வார்கள்!

"'நாமேதான் ஒரு வாரத்துக்குப் போலீசு வேலையைக் கவனித்துக் கொள்ளலாமே' என்ற நிலை கூடாது! போலீசு வேலை என்பது இருபக்கமும் கூர்மையுள்ளது!"

—முதலமைச்சர் அண்ணா

(சென்னைக் கூட்டத்தில்)

## நடக்க இருப்பவை

### 11—7—67

**சென்னை 21-வது வட்டம்**

தி.மு.க. சார்பில் மலேசியா சென்று திரும்பிய அமைப்புச் செயலாளர் என். வி. நடராசன் எம்.எல்.சி. அவர்களுக்குப் பாராட்டுவிழா; இரவு 7 மணிக்கு தொண்டையார்பேட்டை மணிக்கூண்டு அருகில்; தலைவர்: வே. அரங்கநாதன்; பேசுவோர்: என். வி. நடராசன் எம்.எல்.,சி. எஸ். இராகவானந்தம் எம்.சி., எம். ஆர். கண்ணன் எல்.எல்.ஏ., இளம்பரிதி, து. வேணுகோபால் எம்.சி., கே. எம். தீனதயாளன்.

**சென்னை 10-வது வட்டம்**

தி. மு. க. சார்பில் இலங்கை செல்லவிருக்கும் சி. பி. சிற்றரசு எம்.எல்.சி. அவர்கட்குப் பாராட்டு; இரவு 7 மணிக்கு; கிழக்குக் கல்லறைச் சாலையில்; தலைவர்: டி. வெங்கடேசன் எம்.சி., பேசுவோர்: மு. வேதாசலம் எம்.எல் ஏ., கே. இராமலிங்கம் எம்.சி., ஆர். ஆறுமுகம் எம்.சி., அமுதா ராகவன், டி. எஸ். வேலன், பி. இரத்தினம்.

### 12—7—67

**எண்ணூர்**

தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு; தலைவர்: பா. நாகலிங்கம் எம்.எல்.ஏ.; பேசுவோர்: அமைச்சர் ஏ. கோவிந்தசாமி, எஸ். கோவிந்தய்யா, இ. வி. சேது.

**நல்லம நாய்க்கன்பட்டி**

தி. மு. க. சார்பில் இரவு 7-மணிக்கு கே. வி. கே. சாமி திடலில்; தலைவர்: சி. அந்தோணி முத்து; பேசுவோர்: ஆ. திராவிடமணி, தங்கவேல், ஊர்துராசன்.

மா. கி. தசரதன்
தொலைபேசி எண்:
62048

ரோஜா பாக்கு & புகையிலை
ROJA
N. V. K. M. & சன்ஸ், திண்டுக்கல்

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை 13) [illegible]